vikatan.com
NAANAYAM VIKATAN VOLUME: 20 ISSUE: 40
₹35

# நாணயம் விகடன்

பணத்தைப் பெருக்கும் தாரக மந்திரம்

31.8.25

**குறைந்த ரிஸ்க்...
கூடுதல் லாபம்...
சூப்பர் முதலீட்டு
ஃபார்முலா..!**




## அதிக பணம் சேர்க்க...
## சேர்த்த பணம் சிதறாமல் இருக்க...
## செய்யவே கூடாத 8 விஷயங்கள்!



சகாய நியோமி வி



வீ.ஜெயக்குமார்



ஆனந்த் பார்த்தசாரதி

**என்னுடைய அலுவலக நண்பர் பங்குச் சந்தையிலும், மியூச்சுவல் ஃபண்டிலும் முதலீடு செய்து வருகிறார். அவர் முதலீடு செய்கிற பங்குகள் மற்றும் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களில் என்னையும் முதலீடு செய்யச் சொல்கிறார். அவரைப் பின்பற்றி, அவர் முதலீடு செய்யும் திட்டங்களில் நானும் முதலீடு செய்யலாமா?**

– @ சுரேஷ் கண்ணன்

வீ.ஜெயக்குமார், நிறுவனர்,
ஜே.கே இன்வெஸ்ட்மென்ட் சர்வீசஸ்,
மதுரை.

"இது சரியான முறை அல்ல. நீங்கள் இருவரும் ஒரே அளவிலான வருமானத்தை ஈட்டுபவர்களாக இருந்தாலும்கூட, ஒவ்வொருவரின் தனிப்பட்ட நிதித் தேவைகள், இலக்குகள், குடும்பச் சூழல் மற்றும் ரிஸ்க் தாங்கும் சக்தி ஆகியவை மாறுபடும். உங்களது நிதி இலக்குகள் மற்றும் ரிஸ்க் தாங்கும் சக்திக்கு ஏற்ப மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதே சரியானதாகும். அவ்வாறு இல்லாமல், பிறருடைய முதலீட்டுத்திட்டங்களை நாம் பின்தொடர்வது, மருத்துவரின் பரிந்துரை இன்றி மருந்து உட்கொள்வதற்குச் சமம். எனவே, ஒரு முதலீட்டு ஆலோசகரின் ஆலோசனையின் பேரில் முதலீடு செய்வது சிறந்ததாகும்."

**என் வயது 42. நான் 58 வயதில் பணி ஓய்வு பெறும்போது, எனக்கு ரூ.80 லட்சம் வேண்டும். முதலீட்டில் ரிஸ்க் எடுக்கத் தயார். இதற்கு மியூச்சுவல் ஃபண்டில் எஸ்.ஐ.பி முறையில் மாதம் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும்? எந்தெந்தத் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும்?**

– எஸ்.கண்ணன், திருச்சி.

ஆனந்த் பார்த்தசாரதி, மேலாண் பங்குதாரர்,
*www.arammfinserv.com*

"முதலீட்டுக் காலம் 16 ஆண்டுகள் உள்ளன. இது நீண்ட காலம் என்பதால், நீங்கள் ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்டுகளிலேயே முதலீட்டை மேற்கொள்ளலாம். இந்த ஃபண்டுகளின் மூலம் ஆண்டுக்குச் சராசரியாக 12% வருமானம் கிடைப்பதாக எடுத்துக்கொண்டால், ரூ.80 லட்சத்தைச் சேர்க்க நீங்கள் மாதம் ரூ.13,760 முதலீடு செய்து வர வேண்டும்.

இந்தத் தொகையை, நீங்கள் முதலீட்டில் ரிஸ்க் எடுக்கத் தயார் என்பதால், நான்காகப் பிரித்து லார்ஜ்கேப், மிட்கேப் மற்றும் ஸ்மால்கேப் பங்குகளில் கலந்து முதலீடு செய்யும் மல்டிகேப் ஃபண்ட் மற்றும் ஃப்ளெக்ஸிகேப் பண்ட், மிட்கேப் ஃபங்குகளில் முதலீடு செய்யும் மிட்கேப் ஃபண்ட், ஸ்மால்கேப் பங்குகளில் முதலீடு செய்யும் ஸ்மால்கேப் ஃபண்ட் ஆகியவற்றில் முதலீடு செய்து வர வேண்டும்.

16 ஆண்டுகளில் நீங்கள் மொத்தமாக ரூ.26.42 லட்சம் முதலீடு செய்திருப்பீர்கள். இதற்கு, ஆண்டுக்கு சராசரியாக 12% வருமானம் கிடைத்தால், நீங்கள் எதிர்பார்க்கும் ரூ.80 லட்சம் சுலபமாகக் கிடைத்துவிடும். இந்த ஃபண்டுகளின் வருமானச் செயல்பாட்டை, ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்வது அவசியம்."

கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி: கேள்வி-பதில் பகுதி,
நாணயம் விகடன், 757, அண்ணாசாலை, சென்னை-2. navdesk@vikatan.com



a1e652e1-34f2-489a-bb87-27c3e1f88f6f